4th November 1952] [Sri R. S. Arumugam]

‘ உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்.’

என்ற பாட்டு இருந்ததே தவிர, அந்தப் பாட்டின் கருத்துப்படி இருக்கவில்லை. எதிர்மாராக இருக்கிறது. நாடு நலம் அடைய விவசாயி மதிக்கப்பட வேண்டும். சங்கடம் இல்லாமலிருக்கவேண்டும். தஞ்சாவூரில் மாத்திரம் தான் இந்தச் சங்கடம் இருக்கிறதென்பது இல்லை. மற்ற ஜில்லாக்களிலும் இந்த சங்கடங்கள் இருக்கின்றன. அனேக இடங்களில் ‘ எவிக்ஷன் ’ நடந்து கொண்டுதான் இருக்கிறது. அதை உடனே தடுக்கவேண்டும். மேலும் தஞ்சாவூர் ஜில்லாவில் இதை அமுல் நடத்தி அந்த ஜில்லாவில் இது சரியான முறைக்கு வந்தபிறகு, வாரம் முதலியன விவசாயிகளுக்கு அதிகம் கிடைக்கக்கூடிய அளவில் செய்து எல்லா ஜில்லாக்களுக்கும் இந்த சட்டத்தை உடனடியாகக் கொண்டுவரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

“ ஆனால், இதுவரையிலும் எந்தவிதமான பாதுகாப்பும், எந்த விதமான காவலும் இல்லாது எந்த நேரத்திலும் வெளியே போகச் செய்யலாம் என்ற நிலை இருந்ததை மாற்றி அவர்களுக்கு பாதுகாப்பு அளித்து, சட்டத்தின் மூலமாக நாம் வழக்கு கோருவதற்கு வற்பாடு செய்து கொள்வதற்கு அனுகூலமாக இந்த சட்டத்தை இந்த சட்டசபையில் கொண்டுவந்த நமது ரெவின்யூ மந்திரி அவர்களுக்கும் நமது தலைவர் ராஜாஜி அவர்களுக்கும் என நன்றியைத் தெரிவிக்கிறேன். முதலாவதாக தலைமைப் பதவியை ஏற்கும்போது, இரண்டு காரியங்களை, அதாவது ‘ ஒழுக்கம் ’, ‘ விவசாயம் ’ இந்த இரண்டையும் நான் கவனிக்கப்போகிறேன் என்று ராஜாஜி சொன்னார்கள். அந்த முறையிலே இப்பொழுது விவசாயத்தைப்பற்றி அக்கரை எடுத்திருக்கிறார்கள். நெசவுத் தொழிலாளர்களைப் பற்றியும், நெசவுத் தொழிலாளர்களுடைய பாதுகாப்பைக் குறித்தும் காலையிலும் இப்பொழுது விவசாயத் தொழிலாளர்களுடைய பாதுகாப்பைப் பற்றியும் கவனிக்க இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது தொழிலாளர்களின் நற்கால ஆரம்பம் என எண்ணுகிறேன். இந்த அளவிலே ஒரு நல்ல சட்டம் வந்திருக்கிறது என்பதைக் குறித்து சந்தோஷப் படுகிறேன். இன்னும் இதில் ஒரு சில குறைகளும் இருக்கின்றன. எல்லா நிலச்சுவாந்தார்களையும் இந்த சட்டம் கட்டுப்படுத்தக்கூடிய அளவிலே செய்வது, மேலும், 19-7-48-ம் தேதியில் நீக்கிய விவசாயிகளை பழைய நிலங்களைப் பயிர் செய்வதற்கு ஏற்பாடு செய்வது, விவசாயிக்குக்கிடைக்கும் வருமானப் பகுதியைக் கூட்டுவது போன்ற காரியங்களெல்லாம் இன்னும் இருக்கின்றன. அதையெல்லாம் செய்வார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக் கொண்டு எனது மனப்பூர்வமான ஆதரவையும் தெரிவித்து எனது பேச்சை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.”

MR. SPEAKER :—“ The House will now adjourn to meet again at 10-30 a.m. on Wednesday, 5th November 1952.”

The House then adjourned.

VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

(1) *G.O. No.* 2408, *Public (Services), dated the* 10*th October* 1952, *excluding the post of part-time Medical Officer, Madras Electricity System, from the purview of the Madras Public Service Commission.* [*Laid on the table in accordance with Article* 320 (5) *of the Constitution.*]

(2) *G.O. No.* 1075, *Rural Welfare, dated* 25*th September* 1952—*Amendment to Madras Cottage Industries Loans and Subsidy Rules*, 1948.